வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 30.05.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- குடியரசு துணை தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், ஒரு நாள் பயணமாக நாளை கேரளம் செல்லவுள்ளார்.
- கோவா மாநிலம் இன்று தனது 39-ஆவது உதய தினத்தைக் கொண்டாடுகிறது.
- நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் எந்தவித சவால்களையும் எதிர்கொள்ள ராணுவம் தயாராக உள்ளதாக ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவேதி தெரிவித்துள்ளார்.
- பாதுகாப்பு படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌஹான், இன்று தனது இராணுவ சேவையில் இருந்து விடை பெற்றார்.

***சி.பி. ராதாகிருஷ்ணன் (09)***

குடியரசு துணை தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், ஒரு நாள் அரசுமுறை பயணமாக நாளை கேரளம் மாநிலத்திற்குச் செல்லவுள்ளார். கோட்டயத்தில் நடைபெறவுள்ள மலையாள நாளிதழான தீபிகா-வின் 140ஆவது நிறுவன தின கொண்டாட்டங்களை அவர் தொடக்கி வைக்கவுள்ளார். மேலும், கண்ணூரில் ராஜ்ய சபா உறுப்பினர் திரு.சதானந்தன் மாஸ்டர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கவுள்ளார். குடியரசு துணைத் தலைவரின் வருகையை ஒட்டி மாநிலம் முழுவதும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*கோவா -1 (07)*

கோவா மாநிலம் இன்று தனது 39-ஆவது உதய தினத்தைக் கொண்டாடுகிறது. விடுதலைக்குப் பிறகு நாட்டின் மிக முக்கியமான மாநிலங்களில் ஒன்றாக கோவா உருவெடுத்த பயணத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது. இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பனாஜியிலுள்ள, கலா அகாடமியில் நடைபெறும் மாநில தின கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார்.

*கோவா -2 வாய்ஸ் (17)*

கோவா மாநில உதய தினத்தை முன்னிட்டு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கோவா அதன் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் அன்பான விருந்தோம்பலுக்கு மட்டுமல்லாமல் கல்வி, தொழில்நுட்பம், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் அடைந்துள்ள முன்னேற்றத்திற்காகவும் புகழ் பெற்றது என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கோவாவின் முன்னேற்றத்திற்கும் அடையாளத்திற்கும் பங்களித்த அனைவரையும் நினைவு கூர்வதற்கான ஒரு சந்தர்ப்பம் இந்த நிகழ்ச்சி என்றும், இந்த மாநிலம், தொடர்ந்து செழித்து, விக்சித் பாரத் தொலைநோக்குப் பார்வைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்றும் தாம் நம்புவதாக கூறினார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், கோவாவை, இந்திய விருந்தோம்பலின் சாரத்தை உலகிற்கு பிரதிபலிக்கும் கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு தனித்துவமான கலவை என்று புகழாரம் சூட்டினார்.

***உபேந்திர துவேதி -1 (16)***

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் எந்தவித சவால்களையும் எதிர்கொள்ள ராணுவம் தயாராக உள்ளதாக ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவேதி தெரிவித்துள்ளார். இன்று புனே தேசிய பாதுகாப்பு அகாடமியின் 150ஆவது பயிற்சி நிறைவு விழா நிகழ்ச்சியில், உரையாற்றிய அவர், உயர்தர நிபுணத்துவம், தலைமைப் பண்புகளுடன் நவீன தொழில்நுட்பத் திறனுடன் கூடிய கற்றலின் அவசியம் குறித்து வலியுறுத்தினார். இந்திய ஆயுதப் படைகள் உயர் செயல்பாட்டு எச்சரிக்கை நிலையில் இருப்பதாகவும், நிலைமை, மேலும் ராணுவ நடிவடிக்கையை அவசியமாக்கினால், ஆப்ரேஷன் சிந்தூர் 2.0-வுக்கு தயாராக இருப்பதாகவும், அவர் கூறினார். இந்தப் பயிற்சியில் இருந்து வெளியேறும் பெண் பயிற்சி மாணவர்களின் செயல்பாட்டை பாராட்டிய ஜெனரல் துவேதி, தைரியம், உறுதிப்பாடு மற்றும் ராணுவச் சிறப்பு ஆகியவை பாலின பாகுபாடற்ற குணங்கள் என்றும் கூறினார். மேலும், பாதுகாப்பு சேவையில் மகளிர் பங்களிப்பு குறித்து பெருமிதம் தெரிவித்த அவர், தேச சேவையை முதன்மையாக கொண்டு, இந்த வீரர்கள் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

***உபேந்திர துவேதி -2 (06)***

இதற்கிடையே புதுச்சேரியின் முன்னாள் துணை நிலை ஆளுநரும், புகழ்பெற்ற சமூக சீர்திருத்தவாதியுமான டாக்டர் கிரண்பேடி, நேற்று நடைபெற்ற 150ஆவது தேசிய பாதுகாப்பு அகாடமியின் பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் 21 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 354 பேருக்கு பயிற்சி நிறைவு பட்டங்களும் வழங்கப்பட்டன.

*இந்தி இதழியல் தினம் (12)*

இந்தி இதழியல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்தி மொழியில், இதழியல் துறை தொடங்கியதை நினைவுகூரும் வகையில் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் மே 30ஆம் தேதி இந்நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் முதல் இந்தி செய்தித் தாளான உதந்த் மார்தண்ட் 1826ஆம் ஆண்டு மே 30ஆம் தேதி கொல்கத்தாவிலிருந்து வெளியிடப்பட்ட நிகழ்வை, இந்நாள் குறிக்கிறது. இந்தி இதழியலின் முன்னோடியாக கருதப்படும், பண்டிட் ஜுகல் கிஷோர் ஷுக்லா என்பவரால் இந்த செய்தித் தாள் தொடங்கப்பட்டு, அதன் பதிப்பாசிரியராகவும் அவர் பணியாற்றினார். இந்நாளையொட்டி இந்தி மொழிக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இதழியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அறிஞர்களுக்கு மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

*மியான்மர் - (4)*

மியான்மர் அதிபர் திரு. யூ மின் ஆங் ஹ்லைங் 5 நாள் பயணமாக இன்று இந்தியா வந்துள்ளார்.

*மியான்மர் 2 வாய்ஸ் (17)*

(வாய்ஸ்)

<u>மியான்மர் அதிபர் தமது பயணத்தின் முதற்கட்டமாக, பீகார் மாநிலம் கயாவிலுள்ள உலக புகழ்பெற்ற மகா போதி கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தார். பின்னர், புத்தர் ஞானம் பெற்றதாக போற்றப்படும் போதி மரத்தின் கீழ், அவர் தியானம் செய்தார். புத்த கயாவிலுள்ள பர்மிய மடாலயத்தையும் அவர் பார்வையிட்டார். இன்று மாலை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை அவர் சந்திக்கிறார். தொடர்ந்து, நாளை மியான்மர் அதிபர், இந்தியா—மியான்மர் வர்த்தக மன்றத்தில் பங்கேற்று உரையாற்றவுள்ளார். வரும் திங்கட்கிழமை, இரு</u>

நாடுகளுக்கும் இடையிலான, வரலாற்று மற்றும் நாகரிக உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் கலந்துரையாடவுள்ளார். இப்பயணத்தின் ஒரு பகுதியாக வணிகம் மற்றும் தொழில்துறை கலந்துரையாடல்கள் குறித்து ஆலோசிக்க ஜூன் 2ஆம் தேதி மும்பைக்கு அவர் பயணம் மேற்கொள்ள உள்ளார். அவரது இந்தப் பயணம் இந்தியாவிற்கும், மியான்மருக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி, பல நூற்றாண்டுகள் பழமையான கலாச்சார, வரலாற்று மற்றும் பௌத்த உறவுகளை ஆழப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*அனில் சௌஹான் (16)*

பாதுகாப்பு படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌஹான், புதுடெல்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர், இன்று தனது இராணுவ சேவையில் இருந்து விடை பெற்றார். நாட்டின் உயர் மட்ட ராணுவ அதிகாரியாக அவரது சிறப்பான பதவிக்காலம் இந்த விழாவின் மூலம் நிறைவடைந்தது. தேசிய போர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்த பின்னர், முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையுடன் ஓய்வு பெறுவது தனக்கு பெரும் கௌரவம் என்று ஜெனரல் சௌஹான் கூறினார். 40 ஆண்டுகளுக்கும் மேலான சேவைக்குப் பிறகு குடிமை வாழ்க்கைக்கு மாறும் தனது நிலையை குறிக்கும் வகையில் ஜெனரல் சௌஹான் தனது பதவிக்காலம் திருப்திகரமாகவும், நிறைவானதாகவும் இருந்ததாக குறிப்பிட்டார். ஜெனரல் சௌஹானுக்கு பரம் விசிஷ்ட் சேவா பதக்கம், உத்தம் யுத் சேவா பதக்கம், அதி விசிஷ்ட் சேவா பதக்கம், சேனா பதக்கம் மற்றும் விசிஷ்ட் சேவா பதக்கம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. ஜெனரல் அனில் சௌஹானுக்குப் பின், பாதுகாப்பு படைகளின் தலைமை தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி பதவியேற்கிறார்.

*அஸ்வினி வைஷ்ணவ் - (14)*

கிரேட்டர் நொய்டாவின் சூரஜ்பூர் பகுதியில் நிலையான முக்கிய கனிமங்களையும் மேம்பட்ட பொருட்களையும் உற்பத்தி செய்து வரும் லோஹம் நிறுவனத்திற்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல நவீன தொழில் நுட்பங்களில் லித்தியம் மின் கலங்களும், நிலைக் காந்தங்களும், மிக முக்கியப் பங்காற்றுவதாகவும், இவை இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றும், அதற்கான தொழில்நுட்பம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி விரும்புவதாக கூறினார். பிரதமரின் இந்த தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க லோஹம் என்ற பெயருடைய ஒரு இளம் புத்தொழில் நிறுவனம், மிகவும் நுணுக்கமான ஒரு தொழில் நுட்பத்தை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளதாகவும், அவர் பெருமிதம் தெரிவித்தார்.

*காரைக்கால் (13)*

காரைக்காலை அடுத்த திருநள்ளாற்றில் அமைந்துள்ள உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் கோவிலில் ஸ்ரீ சனிபகவானை தரிசனம் செய்ய ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டுள்ளனர். கோடை விடுமுறையின் கடைசி சனிக்கிழமையான இன்று தமிழகப் பகுதிகளான திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும், பிற மாநிலங்களான கேரளம், ஆந்திரா தெலங்கானா உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சிறப்பு தரிசனம் செய்தனர். மேலும், வைகாசி விசாகத்தை முன்னிட்டு ஆலய பிரம்ம தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றது. பக்தர்களின் வருகை அதிகரித்துள்ள நிலையில் திருநள்ளாறு காவல் கண்காணிப்பாளர் திரு. பழனிவேலு மற்றும் ஆய்வாளர் திரு. பிரவீண் குமார் தலைமையில் திருநள்ளாறு பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.